**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC.400/2024**

**Prosecution witness : அ.சா.6** **Date : 03.07.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )** (A1 and A4 absent petition filed and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2021ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்த போது கடந்த 17.07.2022–ம் தேதி மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சேஷராயன் என்பவரை அனுப்பி அவர் சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த ராஜா, த/பெ.மாறப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் என் வசம் ஒப்படைத்ததன் பேரில் நான் புகார் மனு ரசீது அளித்து அதன் பேரில் விசாரணை செய்து பின்னர் விசாரணையின் அடிப்படையில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.180/2022 u/Sec. 294(பி), 323, 324, 506(2) IPC கீழ்** வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 17.07.2022 ம் தேதி மாலை 4.00 மணிக்கு சம்பவ இடம் பொடையன் தெரு வாதி ராஜா வீட்டு முன்பு சென்று சாட்சிகள் குருசாமி மற்றும் மாது ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார்

செய்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ3 மற்றும் அ.சா.ஆ.4** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் ராஜா, சுமதி, செல்வி, செந்தில், சரவணன், மாறப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த ராஜா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரசாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். கடந்த 27.02.2022ம் தேதி 16.30 மணியளவில் சம்பவயிடத்தில் 11 செ.மீ சுற்றளவுள்ள மரக்கட்டை ஒன்று மற்றும் உடைந்த நிலையில் உள்ள வில்லை ஓட்டின் உடைந்த சிறிய துண்டுகள் இரண்டு சாட்சிகள் குருசாமி மற்றும் மாது ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் வழக்கு சொத்தை படிவம் 95ன் வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95 **அ.சா.ஆ.6** ஆகும்.

4. இவ்வழக்கின் எதிரி கடந்த 07.03.2022 ம் தேதி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை.

5. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 08.08.2022 ம் தேதி **நி.கு.எண்.180/2022 u/Sec. 294(பி), 323, 324, 506(2) IPC ன் கீழ்** குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

**6)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ராஜாவை யார் யார் கட்டையால் வாய் மீது அடித்ததாக எனது விசாரணையில் கூறியுள்ளார்கள் என்றால் மோகன்ராஜ் என்பவர் கட்டையால் வாயின் மீது அடித்ததாக சொன்னார். ஓடால் பின்னந்தலையில் யார் யார் அடித்தனர் என்றால் வாசுதேவன் அடித்ததாக சொல்லியுள்ளார். என் விசாரணையில் அ.சா.1 மணிகண்டன், கணேசன் ஆகியோர் கட்டையால் வாய் மீது அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு இல்லை.

7) மோகன்ராஜ், கணேசன் இருவரும் அ.சா.1யை ஓடால் பின்னந்தலையில் அடித்ததாக என் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு இல்லை. இந்த வழக்கின் புகார்தாரர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து கிட்டதட்ட 13 மணிநேரம் கழித்து தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக மருத்துவ குறிப்பு உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றதாக என் விசாரணையில் உள்ளதா என்றால் இல்லை.

8) என் விசாரணையின் படி இந்த பிரச்சனை எவ்வாறு ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் கட்டிநாயக்கன் பட்டியை சேர்ந்த ஜகநாதன் மகன் ஹரி என்பவர் மீது இந்த வழக்கின் புகார்தாரர் இரு சக்கர வாகனத்தை மோதுவது போல் வந்ததாகவும் அதனை கேட்பதற்காக எதிரி வாசுதேவன் என்பவர் அவருடைய நண்பர்களுடன் சேர்ந்து புகார்தாரர் வீட்டிற்கு சென்று அவரை தாக்கியதாக தெரிந்து கொண்டேன்.

9) இந்த வழக்கில் ஜெகநாதன், ஹரியை விசாரித்து சாட்சியாக சேர்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் புகார்தாரரரிடம் இரு சக்கர வாகனம் உள்ளதா என விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் அ.சா.2 சுமதி என் விசாரணையில் சம்பவ சமயத்தில் அ.சா.1 மற்றும் அவர் மட்டும் தான் சம்பவயிடத்தில் இருந்ததாகவும் மற்றவர்கள் சத்தம் கேட்டு சம்பவம் முடிந்து சம்பவயிடம் வந்ததாக சொல்லியுள்ளார்களா என்றால் அவ்வாறு இல்லை.

10) சம்பவ சமயத்தில் சம்பவயிடத்தில் எத்தனை நபர்கள் இருந்ததாக விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சம்பவ சமயத்தில் எதிரிகள் நான்கு நபர்கள் மற்றும் அ.சா.1, அ.சா.2யை தவிர வேறு யாரும் இல்லை என தெரிந்து கொண்டேன். நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் ஹரி என்ற சிறுவர் மீது இரு சக்கர வாகனத்தை மோதிவிட்டு சென்றதாகவும் அதனை கேட்க வந்த ஹரியின்

தகப்பனார் மற்றும் அந்த ஊரைச் சேர்ந்த நபர்கள் மீது தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

11) அ.சா.1, அ.சா.2 என் விசாரணையில் ஆஜர் எதிரிகளை அடையாளம் தான் தெரியும் பெயர் தெரியாது என்று சொல்லியுள்ளார்களா என்றால் அவ்வாறு இல்லை. ஆஜர் எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.